<u>கூடுதல் மாவட்ட நீதிமன்றம், ஸ்ரீவில்லிபுத்தூர்.</u>

OS.22/2018 நாள்.20.11.2021

வா.சா.2 - சுலைமான்

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் டெய்லர் வேலை செய்கிறேன். முனியசாமி என்ற ராஜு எனக்கு தெரியுமா என்றால் அவரிடம் நான் வேலை பார்த்தேன். அவர் வைத்திருக்கும் டெய்லர் கடையில் நான் டெய்லராக வேலை பார்த்தேன். நான் காஜா போடும் வேலை செய்ய ஆரம்பித்து பின்னர் டெய்லர் தொழிலும் தெரிந்துகொண்டேன். சுமார் 20 வருடங்களாக முனியசாமி என்ற ராஜு எனக்கு பழக்கம். நான் அவரிடம் 2002 ஆண்டு வரை வேலை பார்த்தேன். நான் கடைசியாக அவரிடம் எவ்வளவு சம்பளம் வாங்கினேன் என்றால் கேட்டால் துணிக்கு ஏற்றவாறு சம்பளம் வழங்வது வழக்கம். வாதிகள் முனியாண்டி, காளியம்மாள் என்னிடம் துணி தைக்க கொடுத்த வகையில் பழக்கம். வாதிக்கு எனக்கும் சுமார் 10 வருட பழக்கம். பிரதிவாதி தமிழரசி முனியசாமியிடம் கொடுக்கல் வாங்கல் வைத்திருந்த வகையில் எனக்கு தெரியும். முனியசாமி என்ற ராஜு சொல்லி தான் எனக்கு அவரை தெரியும். பிரதிவாதியின் கணவர் கூட்டுறவு வங்கியில் பணிபுரிந்து இறந்துவிட்டார் என்று அக்கம் பக்கத்தினர் பேசிக்கொண்ட வகையில் தெரியும். தமிழரசி மஞ்சபூ தெருவில் குடியிருந்து வருகிறார் என்று தெரியும். 17.01.2013 தேதியிட்ட வாசாஆ2 அடமான பத்திரத்தில் நான் எதுவும் சாட்சி கையெழுத்து போடவில்லை. அன்றைய தேதியில் தமிழரசி எவ்வளவு தொகைக்கு அடமான கடன் பத்திரம் எழுதிக்கொடுத்தார் என்று எனக்கு தெரியாது. 23.03.2005 தேதியிட்ட அடமான பத்திரத்தில் எவ்வளவு தொகை குறிப்பிட்டிருந்தது என்று எனக்கு தெரியாது. அதுபோல் வாசாஆ3 அடமானத்திற்கு பிரதிவாதி எவ்வளவு தொகை பெற்றுக்கொண்டார், எவ்வளவு தொகைக்கு எழுதிக்கொடுத்தார் என்று எனக்கு தெரியாது. வாசாஆ4 அடமானத்தின் அடிப்படையில் எவ்வளவு தொகை பெற்றுக்கொண்டார்,

எவ்வளவு தொகைக்கு எழுதிக்கொடுத்தார் என்று எனக்கு தெரியாது. வாசாஆ5 அடமானத்தின் அடிப்படையில் எவ்வளவு தொகை பெற்றுக்கொண்டார், எவ்வளவு தொகைக்கு எழுதிக்கொடுத்தார் என்று எனக்கு தெரியாது. வாசாஆ1 முதல் வாசாஆ5 வரையுள்ள அடமான பத்திரங்களை நான் பார்த்தது இல்லை. அடமானம் வாதிக்கு மேடோவர் செய்வதற்கு முன்பு நான் பிரதிவாதியிடம் சென்று எவ்வளவு தொகை பாக்கி செலுத்த வேண்டும் என்று கேட்கவில்லை. ரூ.9,70,000/-ம் எங்கு செலுத்தப்பட்டது என்று கேட்டால் ரூ.8,00,000/-ம் வாதி முனியசாமி என்ற ராஜு வங்கி கணக்கில் செலுத்தினார். ரூ.1,70,000/-ம் முனியாண்டி ரொக்கமாக செலுத்தினார். அந்த இருவரின் வங்கி கணக்கின் பரிமாற்றங்களை பார்த்தால் மேற்கூறிய விபரம் தெரியவரும் என்றால் சரிதான். எவ்வாறு பண பரிவர்த்தனை செய்யப்பட்டது என்பதை காண்பித்து தான் வாசாஆ6 மேல் அடமான பத்திரம் எழுதப்பட்டது. என்னிடம் காண்பிக்கப்படும் வாகன பதிவு சான்றிதழில்(வரிசை எண்.6615031) உள்ள 2வது புகைப்படம் ஒட்டப்பட்டுள்ளவர் முனியசாமி என்ற ராஜு தான். அதன்மீது ஒட்டப்பட்டுள்ளதும் அவரது புகைப்படம் தான் அது **பி.வா.சா.ஆ1.** முனியசாமி என்ற ராஜீயிடம் ஏற்படுத்திக்கொண்ட வாசாஆ1 முதல் வாசாஆ5 வரையுள்ள அடமான பத்திரங்களின் அடிப்படையில் பிரதிவாதி எவ்வளவு செலுத்தியுள்ளார் என்றும், முனியசாமி என்ற ராஜு எவ்வளவு பெற்றுக்கொண்டுள்ளார் என்றும், எனக்கு நேரடியாக தெரியாது. பிரதிவாதி முனியசாமி என்ற ராஜுயிடம் மேற்கூறிய அடமானங்களுக்கு ரூ.9,70,000/- கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்பதும், வாதியும் முனியசாமி என்ற ராஜு என்பவரும் எனக்கு வேண்டியவர்கள் என்பதால் அவருக்கு அனுசரணையாக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாசாஆ6 அடமான மேடோவர் படி பிரதிவாதி எந்த தொகையும் செலுத்த கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. பிரதிவாதியை யார் என்று தெரியாமல் வாதி சொல்லி கொடுத்ததற்கு இனங்க அவரை எனக்கு

தெரியும் என்று பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.